செய்தி வெளியீடு எண்:33/2018 நாள் 06.07.2018

**குடிநீர் இணைப்புகளில் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் எடுத்த நுகர்வோர்களின் குடிநீர் இணைப்பு துண்டிப்பு – சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை:**

சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு உட்பட்ட பகுதிகளில், சமீப காலமாக நுகர்வோர்கள் சட்டவிரோதமாக குடிநீர் இணைப்பில் நேரடியாக மின் மோட்டரை இணைத்து அதிகபடியான குடிநீரை உறிஞ்சி விடுவதால் அத்தெருக்களின் கடை நிலையிலுள்ள குடியிருப்புக்களுக்கு குடிநீர் கிடைக்காமல் போய்விடுகிறது என்ற புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. வீட்டு குடிநீர் இணைப்புகளில் மின்மோட்டார் அமைத்து, சட்ட விரோதமாக எடுக்கப்படும் குடிநீர் திருட்டை கண்டுபிடிப்பதற்காக, குழுக்கள் எற்கனவே அமைக்கப்பட்டுட்டுள்ளது. இக் குழுக்களில் உதவி செயற்பொறியாளரின் கீழ், இரண்டு பணிமனை பொறியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் மூலம் குடிநீர் வழங்கப்படும் நேரங்களில் தெருக்களில் வீடுவாரியாக ஆய்வுசெய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுகர்வோர்கள் மின்மோட்டாரை இணைத்து குடிநீரை எடுப்பது ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டால், அத்தகைய நுகர்வோர்களின் குடிநீர் இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படும் எனவும் மேலும் அவர்களுக்கு அபராதமும் விதிக்கப்படும் எனவும் சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துக்கொள்கிறது. சமீபத்தில் பகுதிப் பொறியாளர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுகளின்போது கீழ்க்கண்ட இடங்களில் சட்டவிரோதமாக மின்மோட்டார் மூலம் நேரடியாக குடிநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டு அந்தந்த வீடுகளின் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது.



கதவு எண் 4/66, வடக்கு திருமலை நகர் 5வது தெரு, வில்லிவாக்கம்

கதவு எண் 64, வடக்கு திருமலை நகர் 5வது தெரு வில்லிவாக்கம்

கதவு எண் 19/6 பஜனை கோயில் 3வது தெரு வில்லிவாக்கம்



வீட்டு எண் 5(3) சுந்தரமூர்த்தி விநாயர் கோயில் தெரு திருவல்லிக்கேணி

இத்தகையான தவறான செயல்களை தடுக்க பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் சென்னைக் குடிநீர் வாரியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்